DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.8

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர் திரு.கிஷண்குமார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 24th day of February, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்தவமனையில் காது, மூக்கு, தொண்டை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 25.05.2022ம் தேதி இரவு 10.10 மணிக்கு விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்தவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, வெம்பக்கோட்டை காவல்நிலைய போலீஸார் 2728 காளிதாஸ் என்பவர் விஜயகரிசல்குளம் காளியம்மன்கோவில் தெருவில் உள்ள இறந்த நபரின் வீட்டு மாடியில் வைத்து இறந்ததாக கண்டுபிடிக்கப்பட்டு மேற்படி பிரேதத்தை மருத்துவரீதியாக பிரேத பரிசோதனை செய்வதற்கு உதவியாக சவக்கிடங்கில் வைக்க அனுமதி அளிக்க கோரிய சாத்தூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோள்கடிதத்துடன் என் முன் ஆஜர்படுத்தப்பட்ட கொத்தாளமுத்து என்பவரின் மனைவி காயத்ரி (27 வயது) என்ற பெண் பிரேதத்தை பார்வையிட்டு அதன் இறப்பை உறுதி செய்தேன்.

பின்னர் இரவு 10.20 மணிக்கு கொத்தாளமுத்து என்பவரின் 4 மாத குழந்தை கோகுல ரக்சன் என்ற ஆண்குழந்தையின் பிரேதத்தை பார்வையிட்டு அதன் இறப்பை உறுதி செய்தேன். பின்னர் இரண்டு பிரேதங்களையும் பிரேத பரிசோதனை செய்யும் பொருட்டு சவக்கிடங்கில் வைக்க பரிந்துரைந்தேன். இறந்துபோன காயத்ரியின் பிரேதத்தை பார்வையிட்டு நான் பதிவு மேற்கொண்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.11, இறந்துபோன கோகுல்ரக்சனின் பிரேதத்தை பார்வையிட்டு நான் பதிவு மேற்கொண்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.12 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.9

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வைரமுத்து | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 24th day of February, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.05.2022 ம் தேதியன்று வெம்பக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.178/2022 வழக்கு சம்மந்தமாக காவல் கண்காணிப்பாளர் அலுவலக தனிப்பிரிவு மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் சாத்தூர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இரவு 20.45 மணிக்கு சம்பவ இடமான விஜயகரிசல்குளம், காளியம்மன்கோவில் அருகே உள்ள துர்க்கை அம்மன் கோவில் பின்புறம் உள்ள சம்பவ இடமான ஜெயராஜ் என்பவரின் வீட்டு மாடியில் உள்ள சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு ரத்தக்கறை படிந்த வெள்ளை கலர் துண்டு ஒன்று, எவர்சில்வர் சர்பத் டம்ளர் இரண்டு, பிளாஸ்டிக் பால் பாட்டில் ஒன்று, நோக்கியா பட்டன் செல்போன் ஒன்று, ரெட்மி செல்போன் ஒன்று மற்றும் குழந்தை மூச்சு அடக்கிட்டான் ஆகையால் நீங்கள் உயிர் வாழ விருப்பம் இல்லை என்று எழுதப்பட்ட

டைரியியிலிருந்து கிழிக்கப்பட்ட பேப்பர் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுமாறு ஆலோசனை வழங்கினேன். பின்பு 16.06.2022ம் தேதி நீதித்துறை நடுவர் 2 சாத்துார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 22.06.2022 அன்று நீதித்துறை நடுவர் 2 சாத்துார் அவர்கள் முன்னிலையில் ஆஜரானேன். எதிரி கொத்தாளமுத்துவிடமிருந்து நான் தயார் செய்து வைத்திருந்த ஒரு பாராவை 1 முதல் 10 தனி தாள்களில் எழுதி வாங்கப்பட்டது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எனக்கு சம்பவ இடத்திற்கு வருவதற்கு யார் தகவல் சொன்னார் என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் தனிப்பிரிவிலிருந்து தகவல் சொன்னார்கள். அதன்பின்னர் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்தும் போன் மூலமாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டனர். நான் போகும் போது ஊர்மக்களும் அங்கு இருந்தார்கள். நான் காவல்துறையினருக்கு ஆலோசனை வழங்கியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SS.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.10

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வேலுச்சாமி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 24th day of February, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது வட்டார தடய அறிவியல் ஆய்வகம் ஆவணப்பிரிவில் மதுரையில் பணியாற்றி உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். எங்கள் ஆய்வகத்திற்கு வெம்பக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.178/2022 தொடர்புடைய வழக்கு ஆவணங்கள் நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூரிடமிருந்து த.கா.3896 சின்னசுப்பு என்பவர் மூலம் மூடி முத்திரையிடப்பட்ட காகித உறை ஒன்று கடந்த 07.06.2022ம் தேதி பெறப்பட்டது. மேலும் ஒரு காகித உறை காவலர் 2790 கிரகலட்சுமி என்பவர் மூலமும் பெறப்பட்டது. அந்த இரு காகித உறைகளை பிரித்துப்பார்த்தபோது, அதனுள் டைரியிலிருந்து கிழிக்கப்பட்ட தாள் ஒன்றும் மேலும் டைரி ஒன்றும், மேலும் மொய்நோட்டு ஒன்றும், மேலும் மாதிரி கையெழுத்துக்கள் அடங்கிய 10 தாள்களும் காணப்பட்டன. இவைகளுக்கு முறையே சர்ச்சைக்குரிய டைரியிலிருந்து கிழிக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட கையெழுத்துக்களுக்கு Q

என்றும், டைரியில் உள்ள சந்தேக நபரின் ஒத்துக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்கு A1 என்றும், மொய் நோட்டில் உள்ள கையெழுத்துக்களுக்கு A2 என்றும் குறியீடுகள் தரப்பட்டன. மாதிரி கையெழுத்துக்களுக்கு S1 முதல் S11 மற்றும் S7a மற்றும் S9a என்று குறியீடுகள் தரப்பட்டன. இவ்வாறு குறியீடு செய்யப்பட்ட பிறகு ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்கள் மற்றும் மாதிரி கையெழுத்துக்கள் ஆகியவற்றோடு சர்சைக்குரிய டைரியிலிருந்து கிழிக்கப்பட்ட தாளில் உள்ள கையெழுத்துக்களை ஒப்பீடு செய்தபோது, A1, S1 முதல் S11, S7a மற்றும் S9a மற்றும் Q ஆகிய கையெழுத்துக்களை ஏற்படுத்திய நபர் ஒருவரே என்று அறிக்கை வழங்கியுள்ளோம். அந்த அறிக்கைக்கான விரிவான விளக்கம் எங்கள் அலுவலக அறிக்கையின் காரணத்தாளில் (Reasoning Sheet) 7 பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளது. சாத்துார் நீதித்துறை நடுவர் 2 அவர்களிடமிருந்து எதிரியின் கையெழுத்துக்கள் கொண்ட 10 தாள்கள் பெறப்பட்டதற்கான 23.06.2022ம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.12, மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலித்த கடந்த 26.07.2022ம் தேதி நாங்கள் வழங்கிய ஆய்வறிக்கை அ.சா.ஆ.13, ஆய்வறிக்கையுடன் நாங்கள் வழங்கிய Reasoning Sheet அ.சா.ஆ.14 ஆகும். நான் ஆய்வுக்கு உட்படுத்திய டைரியிலிருந்து கிழிக்கப்பட்ட Q என்று குறியீடு செய்யப்பட்ட ஆவணம் ஏற்கனவே சா.பொ.3 ஆக குறியிடப்பட்டுள்ளது. நான் ஆய்வுக்கு உட்படுத்திய A2 மொய் நோட்டு சா.பொ.7 ஆகும். A1 டைரி ஏற்கனவே சா.பொ.4 ஆக குறியிடப்பட்டுள்ளது. சந்தேக நபர் சாத்துார் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்னிலையில் அ.சா.9ம் எழுதி நீதிமன்றத்தில் ஒப்படைத்த S1 முதல் S11 மற்றும் S7a மற்றும் S9a ஆகிய மாதிரி கையெழுத்துக்கள் அடங்கிய ஆவணம் சா.பொ.8 வரிசை (13 எண்ணம்)

(அசல் கையெழுத்துக்கள் அடங்கிய ஆவணம் வழக்கில் கோப்பில் இல்லாத நிலையில் ஜெராக்ஸ் நகல் எதிரி தர்ப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையின் குறியீடு செய்யப்படுகிறது.) இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

Q மற்றும் A1 ல் உள்ள கையெழுத்துக்கள் என் முன்னிலையில் பெறப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருநபர் 10 கையெழுத்துக்கள் போடும் போது 2,3 கையெழுத்துக்கள் வேறுபடுமா என்றால் வேறுபடாது, ஆனால் மாறுபாடு காணப்படும். அவ்வாறு 10 கையெழுத்துக்கள் போடும் போது 2,3 கையெழுத்துக்கள் வேறுபடும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஒருவர் மன அழுத்தத்தில் இருக்கும் போது எழுதும் பட்சத்தில் கையெழுத்துக்கள் வேறுபடும் என்றால் சரியல்ல, மாறுபாடு காணப்படும், வேறுபடாது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. S1ல் உள்ள வாழ என்ற எழுத்திற்கும், Qல் உள்ள வா எழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல, அது மாறுபாடு. S1 முதல் S11, S7a மற்றும் S9a ஆகிய ஆவணங்களில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களுக்கும், Q, A1, A2 ஆவண்களில் உள்ள எழுத்துக்களின் வளை கோடுகளுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. வித்தியாசம் உள்ளது என்றும், நான் காவல்துறைக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மறுக்கப்பட்ட கையெழுத்துக்களுக்கும், ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்துக்களுக்கும் இடையேயான வித்தியாசத்தை ஒற்றுமையாக உள்ளது என கருத்துரை வழங்க இயலும் என்றும், ஒரே நபர் எழுதினார் என்று கருத்துரை வழங்க இயலாது என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள கையெழுத்துக்கள் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்று

கருத்துரை வழங்கியுள்ளது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நான் வழங்கிய ஆய்வறிக்கை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல. நான் A2 ஆவணத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேனா என்றால் எடுத்துக் கொண்டேன், அதிலுள்ள கையெழுத்துக்கள் மற்ற ஒத்துக் கொள்ளப்பட்ட மற்றும் மாதிரி கையொப்பங்களோடு ஒரே மாதிரி காணப்படாததால் நான் அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை. என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது A2 மொய் நோட்டில் உள்ள கையெழுத்து யாருடையது என்று கேட்டு தெரிந்துகொள்ளவில்லை.

மறுவிசாரணை – இல்லை.